செ.வெ.எண். 188 நாள்.19.03.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழக அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் 55 நபர்களுக்கு ரூ.9.25 லட்சம் மதிப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.03.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், பாளையங்கோட்டை வட்டம் மேலத்திடியூர் கிராமத்தை சேர்நத 40 பயனாளிகளுக்கு தலா ரூ.20 ஆயிரம் மதிப்பிலான இலவச வீட்டுமனை பட்டாக்களையும், 15.03.2018 அன்று மாற்றுத்திறனாளிகளுக்காண சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் உதவித்தொகை வேண்டி மனு கொடுத்த 4 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை பெறுவதற்ககாண உத்தரவினையும், சமூக பாதுகாப்பு திட்டத்தின கீழ் விதவை ஊதவி தொகை 1 நபருக்கும், மாற்றுத்திறனாளி உதவித்தொகை இரண்டு நபர்களுக்கும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் திருமதி.எம்.ஞானரஞ்சிததேவி,திருமதி.மேரி ஸ்டெல்லா ஆகியோர்க்கு கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளர் பணி நியமன உத்திரவினையும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் உலமாக்கள் நலவாரியத்தின் மூலம் விபத்து மரண உதவித்தொகை திருமதி. ஹவ்வம்மா பீவி, என்பவருக்கு ரூ.1 லட்சம் உதவித்தொகைக்காண காசோலையினையும், நரி குறவர் நலவாரியத்தின் மூலம் தொழில் கடன் 2 நபர்களுக்கு தலா ரூ.7500க்காண காசோலையினையும்,கல்வி உதவித்தொகை மூன்று நபர்களுக்கு ரூ.3000க்காண காசோலையினையும் என மொத்தம் 55 பயனாளிகளுக்கு ரூ.9.25 லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனிப்பிரிவு மூலம் மனுக்கள்,மாவட்ட ஆட்சித்தலைவர் மக்கள்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெற பட்ட மனுக்கள ஆகியவற்றில் நிலுவை உள்ள மனுக்கள் குறித்து ஆய்வு மேற்க்கொண்டார். அனைத்து மனுக்களின் மீதும் உடன் நடவடிக்கை மேற்க்கொள்ள உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா,மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.மகேஷ்வரன், பாளையங்கோட்டை வட்டாச்சியர் திரு.கந்தசாமி, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.